**கவனிக்க.**-*2019.11.08 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2150 - 2019 නොවැම්බර් මස 15 වැනි සිකුරාදා - 2019.11.15

*2150 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 15 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி III - காணிகள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| காணி நிர்ணய அறிவித்தல்கள் | - |
| முன்னறிவித்தல்கள் | - |
| இறுதிக் கட்டளைகள் | - |
| அரசாங்க அதிபர்களினால் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| சிறுநிலச் சொந்தக்காரர் திட்டத்தின்கீழ் அறிவித்தல்கள் | - |
| நிர்ணய உத்தியோகத்தர்களினாற் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள் | - |
| காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்கள் | 280 |
| காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள் | - |
| நானாவித காணி அறிவித்தல்கள் | 286 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்,** அதாவது 2019, திசெம்பர் மாதம் 06 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2019, நவெம்பர் மாதம் 22 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2019 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.


279- B 81578 - 353 (2019/11)

# காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்கள்

## காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உபபிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்புப்பத்திரத்தை இரத்துச் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்

மத்திய மாகாண சபையின், கண்டி மாவட்டத்தில், தொலுவ பிரதேச செயலாளர் பிரிவில், பிரதேச செயலாளர்/பிரதிக் காணி ஆணையாளர் (மாகாணங்களுக்கு இடையிலான) தெவரப்பெரும அப்புஹாமிலாகே தொன் வில்சன் தயானந்த ஆகிய நான், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19(4) ஆம் உப பிரிவின் கீழ் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களினால் 1995.03.21 ஆந் திகதி வழங்கப்பட்டுள்ள மத்திய/மஹ/உட/பிர/939 ஆம் இலக்க கொடைப்பத்திரத்தின் உரித்தாளராகிய மாணிக்க வடுகே பால மஹத்தயா அவர்களுக்கு வழங்கி கம்பளை மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் சீ. 12/198 ஆம் இலக்கத்தின் கீழ் 1995.08.08 ஆந் திகதிய பதிவு செய்யப்பட்டுள்ள கீழே குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணிக்கு பதிலீட்டாளர் ஒருவராவதற்கு சட்டபூர்வமான உரித்தாளர் ஒருவர் இல்லாமையினால் அல்லது உரித்துடைய ஒருவர் இருந்தபோதிலும் அவர், பதிலீட்டாளராவதற்கு விருப்பமின்மையினால் பதிலீட்டாளராகப் பெயரிடுவதற்கு எவரும் இல்லை என அறிக்கையிடப்பட்டு உள்ளதனால் மேற்படி கொடைப்பத்திரத்தினை உரிய சட்டத்தின் 104 ஆவது பிரிவின் கீழ் இரத்து செய்வதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதனை இத்தால் அறியத் தருகின்றேன். இது தொடர்பாக ஏதேனும் எதிர்ப்புக்கள் இருப்பின் அதனை 2019.12.13 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் அறவித்தல் வேண்டும்.

### அட்டவணை

கண்டி நிர்வாக மாவட்டத்தில் தொலுவ பிரதேச செயலாளர் பிரிவின் கந்துகர பஹல பத்துவ/கோரளே புபுரெஸ்ஸ கிராம அலுவலர் பிரிவில் புபுரெஸ்ஸ என்ற பெயரினைக் கொண்ட கிராமத்தில் அமைந்துள்ளதும், நில அளவையாளர் நாயகத்தின் பொறுப்பில் உள்ள மற்றும் நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட எல் /5-30, 31, 38, 39 ஆம் இலக்க வெளிக்களப் பத்திரத்தில் நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட மு. பி. மஹ. 2398 ஆம் இலக்க நிரல் குறிப்பில் 58 ஆம் இலக்க காணித் துண்டாகக் காட்டப்பட்டுள்ளதும், அளவில் 0.418 ஹெக்ரயார் விஸ்தீரணத்தை உடையதுமான, கீழே குறிப்பிடப்பட்டுள்ள வகையில் எல்லைகளைக் கொண்டதுமான அரச காணி: புபுரெஸ்ஸ குடியிருப்பு,

வடக்கு : காணித்துண்டு இலக்கம் 57 ;
கிழக்கு : காணித்துண்டு இலக்கம் 37 ;
தெற்கு : காணித்துண்டு இலக்கம் 37 மற்றும் 59 ;
மேற்கு : காணித்துண்டு இலக்கம் 59 மற்றும் 20 ;

ரீ. ஏ. டீ. டப்ளியூ. தயாநன்த,
பிரதேச செயலாளர்/பிரதிக்காணி ஆணையாளர்,
(மாகாணங்களுக்கிடையிலான).

பிரதேச செயலாளர் அலுவலகம்,
தொலுவ.
2019, யூன் 12.

11-907/1

---

## காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உபபிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்புப்பத்திரத்தை இரத்துச் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்

மத்திய மாகாண சபையின், கண்டி மாவட்டத்தில், தொலுவ பிரதேச செயலாளர் பிரிவில், பிரதேச செயலாளர் /பிரதிக் காணி ஆணையாளர் (மாகாணங்களுக்கு இடையிலான) தெவரப்பெரும அப்புஹாமிலாகே தொன் வில்சன் தயானந்த ஆகிய நான், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19(4) ஆம் உப பிரிவின் கீழ் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களினால் 1983.12.08 ஆந் திகதி வழங்கப்பட்டுள்ள மஹ/ பிர/ 3422 ஆம் இலக்க கொடைப்பத்திரத்தின் உரித்தாளராகிய லோராவத்த குடியிருப்பு என்ற முகவரியில் வசிக்கும் நாஉருன்ன குருகே மெந்திஸ் அவர்களுக்கு வழங்கி கம்பளை மாவட்டப் பதிவளர் அலுவலகத்தில் சீ. 16/ 6 ஆம் இலக்கத்தின் கீழ் 1954.07.26 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழே குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணிக்கு பதிலீட்டாளர் ஒருவராவதற்கு சட்டபூர்வமான உரித்தாளர் ஒருவர் இல்லாமையினால் அல்லது உரித்துடைய ஒருவர் இருந்தபோதிலும் அவர், பதிலீட்டாளராவதற்கு விருப்பமின்மையினால் பதிலீட்டாளராகப் பெயரிடுவதற்கு எவரும் இல்லை என அறிக்கையிடப்பட்டு உள்ளதனால் மேற்படி கொடைப்பத்திரத்தினை உரிய சட்டத்தின் 104 ஆவது பிரிவின் கீழ் இரத்து செய்வதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதனை இத்தால் அறியத் தருகின்றேன். இது தொடர்பாக ஏதேனும் எதிர்ப்புக்கள் இருப்பின் அதனை 2019.12.13 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் அறிவித்தல் வேண்டும்.

### அட்டவணை

கண்டி நிர்வாக மாவட்டத்தில் தொலுவ பிரதேச செயலாளர் பிரிவின் கந்துகர பஹல பத்துவ/கோரளேயில் லெகுந்தெணிய கிராம அலுவலர் பிரிவில் பன்விலதென்ன என்ற பெயரினைக் கொண்ட கிராமத்தில் அமைந்துள்ளதும், நில அளவையாளர்

நாயகத்தின் பொறுப்பில் உள்ள மற்றும் நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட எல் 5/21 ஆம் இலக்க வெளிக்களப் பத்திரத்தில்/நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட பீ. பீ. ஏ. 2858 ஆம் இலக்க நிரல் குறிப்பில் 63 ஆம் இலக்கக் காணித் துண்டாகக் காட்டப்பட்டுள்ளதும், முப்பத்தி நான்கு பேர்ச் விஸ்தீரணத்தை உடையதுமான, கீழே குறிப்பிடப்பட்டுள்ள வகையில் எல்லைகளைக் கொண்டதுமான அரச காணி: லோராவத்த,

வடக்கு : குடியிருப்பு வீதி, காணித்துண்டு இலக்கம் 64 ;
கிழக்கு : காணித்துண்டு இலக்கம் 64 ;
தெற்கு : காணித்துண்டு இலக்கம் 62 ;
மேற்கு : வீதி ஒதுக்கு மற்றும் குடியிருப்பு வீதி ;

ரீ. ஏ. டீ. டப்ளியூ. தயாநந்த,
பிரதேச செயலாளர்/பிரதிக்காணி அணையாளர்,
(மாகாணங்களுக்கிடையிலான).

பிரதேச செயலாளர் அலுவலகம்,
தொலுவ.
2019, யூன் 12.

11-907/2

---

**காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உபபிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்புப்பத்திரத்தை இரத்துச் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்**

மத்திய மாகாண சபையின், கண்டி மாவட்டத்தில், உடபலாத்த பிரதேச செயலாளர் பிரிவில், பிரதேச செயலாளர்/பிரதிக் காணி ஆணையாளர் (மாகாணங்களுக்கு இடையிலான) ஆர். ஏ. டீ. ரீ. என். தென்னகோன் ஆகிய நான், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19(4) ஆம் உப பிரிவின் கீழ் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களினால் ஆயிரத்துத் தொள்ளாயிரத்து எண்பத்து நான்காம் ஆண்டு நவெம்பர் மாதம் பதின் மூன்றாம் திகதி வழங்கப்பட்டுள்ள மத்திய/பிர/3855 ஆம் இலக்க கொடைப்பத்திரத்தின் உரித்தாளராகிய கலுகல்ஹின்ன குடியிருப்பில் வசிக்கும் மஹம்பே கெதர சரனா அவர்களுக்கு வழங்கி கம்பளை மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் எல். டீ. ஒ. சீ. 2/190 ஆம் இலக்கத்தின் கீழ் 1985.09.05 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழே குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணிக்கு பதிலீட்டாளர் ஒருவராவதற்கு சட்டபூர்வமான உரித்தாளர் ஒருவர் இல்லாமையினால் அல்லது உரித்துடைய ஒருவர் இருந்தபோதிலும் அவர், பதிலீட்டாளராவதற்கு விருப்பமின்மையினால் பதிலீட்டாளராகப் பெயரிடுவதற்கு எவரும் இல்லை என அறிக்கையிடப்பட்டு உள்ளதனால் மேற்படி கொடைப்பத்திரத்தினை உரிய சட்டத்தின் 104 ஆவது பிரிவின் கீழ் இரத்துச் செய்வதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதை இத்தால் அறியத்தருகின்றேன் இது தொடர்பாக ஏதேனும் எதிர்ப்புக்கள் இருப்பின் அதனை 2019.12.13 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் அறிவித்தல் வேண்டும்.

**அட்டவணை**

கண்டி நிர்வாக மாவட்டத்தில் உடபலாத்த பிரதேச செயலாளர் பிரிவின் கந்துகர இஹல பத்துவ/கோரளே கலுகல்ஹின்ன கிராம அலுவலர் பிரிவில் மாவதுர என்ற பெயரினைக் கொண்ட கிராமத்தில் அமைந்துள்ளதும் மற்றும் நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட பி. பி. 8851 ஆம் இலக்க துண்டாடப்படும் வரைபடத்தில்/36 (முப்பத்தாறாம்) ஆம் இலக்க காணித் துண்டாகக் காட்டப்பட்டுள்ளதும், ஒரு ஏக்கர் பதினொரு பேர்ச் விஸ்தீரணத்தை உடையதுமான, கீழே குறிப்பிடப்பட்டுள்ள வகையில் எல்லைகளைக் கொண்டதுமான அரச காணி: கலுகல்ஹின்ன

வடக்கு : காணித்துண்டு இலக்கம் 34 ;
கிழக்கு : காணித்துண்டு இலக்கம் 19 ;
தெற்கு : காணித்துண்டு இலக்கம் 53 ;
மேற்கு : காணித்துண்டு இலக்கம் 35 ;

ஆர். ஏ. டி. ரீ. என். தென்னகோன்,
பிரதேச செயலாளர்/பிரதிக்காணி ஆணையாளர்,
(மாகாணங்களுக்கிடையிலான)

பிரதேச செயலாளர் அலுவலகம்,
உடபலாத,
கம்பொல.
2019, யூன் 26.

11-907/3

---

**காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உபபிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்புப்பத்திரத்தை இரத்துச் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்**

மத்திய மாகாண சபையின், கண்டி மாவட்டத்தில், அமைந்துள்ள உடுநுவர பிரதேச செயலாளர் பிரிவில், பிரதேச செயலாளர்/பிரதிக் காணி ஆணையாளர் (மாகாணங்களுக்கு இடைப்பட்ட) ஆகிய மாதவ வர்ணகுலசூரிய ஆகிய நான், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19(4) ஆம் உப பிரிவின் கீழ் அதிஉத்தமராம் சனாதிபதி அவர்களினால் 1991.07.12 ஆந் திகதி வழங்கப்படுள்ள மத்யம்/உனு/94 ஆம் இலக்க அளிப்புப் பத்திரத்தின் உரிமையாளரான தல்வட்டிய குடியேற்றம் எனும் முகவரியில் வசிக்கும் சித்தி துவைலா உம்மா என்பவருக்கு கையளிக்கப்பட்டு, கண்டி மாவட்டப் பதிவாளர், அலுவலகத்தில் LDO/C/9/1 ஆம் இலக்கத்தின் கீழ் 1991.07.12 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணிக்கு பின்னுரிமையாளராவதற்குச் சட்ட ரீதியான உரிமையாளராக இருக்க விரும்பாத காரணத்தால் பின்னுரித்துக்கு ஒருவரும் நியமிக்கப்பட்வில்லை என அறிக்கையிடப்பட்டுள்ளது. ஆதலால்

குறித்த அளிப்புப் பத்திரத்தை மேற்கூறிய சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் பதிவழித்து நீக்குதல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என இத்தால் அறியத்தருகின்றேன். இது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனைகள் இருந்தால் அவற்றை 2019.12.13 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும்.

**அட்டவணை**

கண்டி நிர்வாக மாவட்டத்தின், உடுநுவர பிரதேசச் செயலாளர் பிரிவின் கந்து பளாத பற்றில்/கோறளையிலுள்ள விகாரகம கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த அப்பல்லாகொட எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் கண்டி நில அளவையாளர் அத்தியட்சகர், என்பவரின் பொறுப்பில் வைக்கப்பட்டுள்ளதும், நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்டு பீ. பீ. மஹ. 3690 ஆம் இலக்க வெளிக்களத் தாளில் 31 ஆம் இலக்க காணித் துண்டெனக் காட்டப்பட்டதும் 0.108 ஹெக்டெயார் விஸ்தீரணமுள்ளதும் கீழே தரப்பட்டுள்ள எல்லைகளைக் கொண்டுள்ளதுமான அரச காணித்துண்டு: காணியின் பெயர்: தல்வட்டிய

வடக்கு : காணித்துண்டு இலக்கம் 32, பிரவேசிக்கும் பாதை ;
கிழக்கு : காணித்துண்டு இலக்கம் 32 மற்றும் 33 ;
தெற்கு : காணித்துண்டு இலக்கம் 33, பிரவேசிக்கும் பாதை ;
மேற்கு : பிரவேசிக்கும் பாதை.

மாதவ வர்ணகுலசூரிய,
பிரதேச செயலாளர்.

பிரதேச செயலாளர் அலுவலகம்,
உடுநுவர.
2019, ஏப்பிறல் 27.

11-907/4

---

**காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உபபிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்புப்பத்திரத்தை இரத்துச் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்**

மத்திய மாகாண சபையின், கண்டி மாவட்டத்தில், அமைந்துள்ள கங்க இஹல கோரளை பிரதேச செயலாளர் பிரிவில், பிரதேச செயலாளர் கபில கத்தில செனரோல் ஆகிய நான், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19(4) ஆம் உப பிரிவின் கீழ் அதி உத்தமராம் சனாதிபதி அவர்களினால் 1986.10.20 ஆந் திகதி வழங்கப்பட்டுள்ள மத்திய/கஇகோ. 435 ஆம் இலக்க அளிப்பு பத்திரத்தின் உரிமையாளரான தெபிலிகல குடியேற்றத்தில் வசிக்கும் தேவேந்திர கெதர குணதாச என்பருக்கு கையளிக்கப்பட்டு கம்பளை மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் சி 14/38 ஆம் இலக்கத்தின் கீழ் 1995.11.10 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழே காட்டப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணிக்கு பின்னுபிமையாளராவதற்குச் சட்ட ரீதியான உரிமையாளராக இருக்க விரும்பாத காரணத்தால் பின்னுரித்துக்கு ஒருவரும் இல்லாமையினாலும் அல்லது உரிமையாளர் இருந்தும் அவர் பொறுப்பேற்பதற்கு விரும்பவில்லை எனவும் அறிக்கையிடப்பட்டுள்ளது. ஆதலால் குறித்த அளிப்புப் பத்திரத்தை மேற்கூறிய சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் பதிவளித்து நீக்குதல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது என இத்தால் அறியத்தருகிறேன். இது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனைகள் இருந்தால் அவற்றை 2019.12.13 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும்.

**அட்டவணை**

கண்டி நிர்வாக மாவட்டத்தின் கங்க இஹல கோரளை பிரதேச செயலாளர் பிரிவின் கங்க இஹல கோரளை தெம்பிலிகல கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த தம்பிலிகல பல்லேகம எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் கண்டி நில அளவையாளர் அத்தியட்சகர் பொறுப்பில் வைக்கப்பட்டுள்ளதும் மற்றும் நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்டு பிபிமஹ 4290 இரேகை வரைதலில் 56 ஆம் இலக்க காணித் துண்டெனக் காட்டப்பட்டதும் 0.191 ஹெக்டெயார் விஸ்தீரணமுள்ளதும் கீழே காட்டப்பட்டுள்ள எல்லைகளைக் கொண்டுள்ளதுமான அரசகாணி: தெம்பிலிகல குடியேற்றம்

வடக்கு : ஹரன்கஹவ மற்றும் காணித்துண்டு இலக்கங்கள் 54 மற்றும் 55 ;
கிழக்கு : காணித்துண்டு இலக்கங்கள் 55 மற்றும் 49 ;
தெற்கு : காணித்துண்டு இலக்கங்கள் 49 மற்றும் 57 ;
மேற்கு : ஹரன்கஹவ.

கே. ஜி. லெனரோல்,
பிரதேச செயலாளர்.

பிரதேச செயலாளர் அலுவலகம்,
கங்க இஹல கோரளை.
2019, பெப்புருவரி 13.

11-907/5

---

**காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உபபிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்புப்பத்திரத்தை இரத்துச் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்**

மத்திய மாகாண சபையின், கண்டி மாவட்டத்தில், தொலுவ பிரதேச செயலாளர் பிரிவில், பிரதேச செயலாளர்/பிரதிக் காணி ஆணையாளர் (மாகாணங்களுக்கு இடையிலான) தெவரப்பெரும

அப்புஹாமிலாகே தொன் வில்சன் தயானந்த ஆகிய நான், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19(4) ஆம் உப பிரிவின் கீழ் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களினால் 1996.03.30 ஆந் திகதி வழங்கப்பட்டுள்ள மத்திய/உப/2489 ஆம் இலக்க கொடைப்பத்திரத்தின் உரித்தாளராகிய கட்டுபெலல்லே கெதர முதியன்சே அவர்களுக்கு வழங்கி கம்பளை மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் எல். டீ. ஒ. சீ. 20/45 ஆம் இலக்கத்தின் கீழ் 1997.02.19 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழே குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணிக்கு பதிலீட்டாளர் ஒருவராவதற்கு சட்டபூர்வமான உரித்தாளர் ஒருவர் இல்லாமையினால் அல்லது உரித்துடைய ஒருவர் இருந்தபோதிலும் அவர், பதிலீட்டாளராவதற்கு விருப்பமின்மையினால் பதிலீட்டாளராகப் பெயரிடுவதற்கு எவரும் இல்லை என அறிக்கையிடப்பட்டு உள்ளதனால் மேற்படி கொடைப்பத்திரத்தினை உரிய சட்டத்தின் 104 ஆவது பிரிவின் கீழ் இரத்து செய்வதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதனை இத்தால் அறியத் தருகின்றேன். இது தொடர்பாக ஏதேனும் எதிர்ப்புக்கள் இருப்பின் அதனை 2019.12.13 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் அறிவித்தல் வேண்டும்.

### அட்டவணை

கண்டி நிர்வாக மாவட்டத்தின் தொலுவ பிரதேச செயலாளர் பிரிவின் கந்துகர பஹல பத்துவ/கோரளேயில் ஹல்ஒய கிராம அலுவலர் பிரிவில் மெகொடகலுகமுவ என்ற பெயரினைக் கொண்ட கிராமத்தில் அமைந்துள்ளதும், அரச நில அளவையாளரினால் தயாரிக்கப்பட்ட மஹ/வி/92/145 ஆம் இலக்க துண்டாடப்படும் வரைபடத்தில் 11 ஆம் இலக்க காணித்துண்டாகக் காட்டப்பட்டுள்ளதும், அளவில் 0.207 ஹெக்ரயார் விஸ்தீரணத்தை உடையதுமான, கீழே குறிப்பிடப்பட்டுள்ள வகையில் எல்லைகளைக் கொண்டதுமான அரச காணித்துண்டு: ஹல்ஓய வத்த குடியிருப்பு,

வடக்கு : ஹல்ஓயவத்த காணித்துண்டு இலக்கங்கள் 05 மற்றும் 07 ;
கிழக்கு : காணித்துண்டு இலக்கங்கள் 07 மற்றும் 10 ;
தெற்கு : காணித்துண்டு இலக்கம் 10, ஹல்ஓயவத்த மற்றும் காணித்துண்டு இலக்கம் 12 ;
மேற்கு : காணித்துண்டு இலக்கம் 12.

ரீ. ஏ. டீ. டப்ளியூ. தயானந்த
பிரதேச செயலாளர்/பிரதிக்காணி ஆணையாளர்,
(மாகாணங்களுக்கிடையிலான).

பிரதேச செயலாளர் அலுவலகம்
தொலுவ.
2019, மே 14.

11-907/6

## காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உபபிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்புப்பத்திரத்தை இரத்துச் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்

மத்திய மாகாண சபையின் கண்டி மாவட்டத்தில் அமைந்துள்ள குண்டசாலை பிரதேசச் செயலாளர் பிரிவின், பிரதேசச் செயலாளர் சமந்தி டீ. நாகஹதென்ன ஆகிய நான், காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் 19(4) ஆம் இலக்க உட்பிரிவின் கீழ் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களினால் 1990.07.25 ஆந் திகதி அளிப்புச் செய்யப் பட்ட மஹா/பிர 9983 இலக்கத்தையுடைய அளிப்புப் பத்திரத்தின் உரிமையாளரான ரஜவெல்ல குடியிருப்பில் வசிக்கும் முத்துபட்டின் கெதர குணசேன என்பவருக்கு அளிக்கப்பட்ட, கண்டி மாவட்ட பதிவாளர் காரியலயத்தில் ஈ 20/185 என்ற இலக்கத்தின் கீழ் 1991.03.22 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழ் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணிக்கு பின்னுரிமையாளராவதற்கு சட்ட ரீதியான உரிமையாளர் எவரும் இல்லை என்பதனால் அல்லது சட்ட ரீதியான உரிமையாளர் இருப்பினும் அவர் பின்னுரிமையாளராவதற்கு விருப்பம் இல்லை என்பதனால் பின்னுரிமையாளர் ஒருவர் நியமிப்பதற்கு இல்லை என அறிக்கையிடப்பட்டுள்ளது. ஆதலால் குறித்த அளிப்புப் பத்திரத்தினை மேற்கூறிய கட்டளைச் சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் இரத்து செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என இத்தால் அறியத் தருகின்றேன். இது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனைகள் இருப்பின் அவற்றை 2019.12.06 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலமாக தெரிவிக்க வேண்டும்.

### அட்டவணை

கண்டி நிர்வாக மாவட்டத்தின் குண்டசாலை பிரதேச செயலாளர் பிரிவின் உடகம்பஹ கோறளையின் அஹஸ்பொக்குண தெற்கு கிராம அலுவலபிரிவில் அத்தரகள்ள பல்லேகம்மெத்த கிராமத்தில் அமைந்துள்ளதும், கண்டி நில அளவையாளர் அத்தியட்சகரின் பொறுப்பில் வைக்கப்பட்டுள்ளதும், நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட பிபி மஹ 2353 ஆம் இலக்கத்தையுடைய துண்டு பிரிக்கும் வரைப்படத்தில் 12 ஆம் இலக்க காணித்துண்டெனக் காட்டப்பட்டதும் 0.300 ஹெக்டயார் விஸ்தீரணமுள்ளதும் கீழே தரப்பட்டுள்ள எல்லைகளைக் கொண்டுள்ளதுமான அரச காணித்துண்டு,

வடக்கு : காணித்துண்டு இலக்கங்கள் 05 மற்றும் 11 ;
கிழக்கு : காணித்துண்டு இலக்கங்கள் 13 மற்றும் 36 ;
தெற்கு : காணித்துண்டு இலக்கங்கள் 36 மற்றும் 05 ;
மேற்கு : காணித்துண்டு இலக்கம் 05.

சமந்தி டீ. நாகஹதென்ன,
பிரதேச செயலாளர்.

பிரதேச செயலாளர் அலுவலகம்,
குன்டசாலை,
மெனிக்ஹின்ன.

11-907/7

### காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உபபிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்புப்பத்திரத்தை இரத்துச் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்

வடமேல் மாகாண சபையின், குருநாகல் மாவட்டத்தில், கனேவத்த பிரதேச செயலாளர் பிரிவில், பிரதேச செயலாளர்/பிரதி காணி ஆணையாளர் (மாகாணங்களுக்கு இடையில்) ரன்னுலு நிரங்ஜலா நிசாந்தி லிவேரா கருணாரத்ன ஆகிய நான், காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் 19(4) ஆம் உப பிரிவின் கீழ் அதியுத்திமராம் சனாதிபதி அவர்களினால் 1966.04.02 ஆந் திகதி வழங்கப்படுள்ள இலக்கம் குரு/ பிர 66821 இற்கான அளிப்பு பத்திரத்தின் உரிமையாளராகிய கும்புக்கெடே, நெரியாவ இல் குடியிருக்கும் யாபா முதியன்சேலாகே பொடி நோனா இற்கு வழங்கி குருநாகல் மாவட்ட ரெஜிஸ்ரார் அலுவலகத்தின் இலக்கம் B288/8677/96 இன் கீழ் 1966.11.11 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழ்க் காணப்படும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள காணிக்கு பின்னுரித்துக்கு சட்டரீதியாக உரிமையற்றவர் இல்லாததனால் அல்லது உரித்துடையவர் இருந்தாலும் அவர் பின்னுரிமையாளராவதற்கு விருப்பம் தெரிவிக்காமையினால் பின்னுரித்துக்கு ஒருவரையும் நியமிப்பதில்லை என்று தெரிவித்து இருப்பதனால் உரிய சட்டத்தில் 104 ஆம் பிரிவின் கீழ் இரத்து செய்வதற்கு செயற்படுவதாக இத்துடன் தெரிவித்துக் கொள்கின்றேன். இது பற்றி ஏதாவதொரு எதிர்ப்பு இருப்பின் அதனை 2019.12.01 ஆந் திகதிக்கு முன் எனக்கு எழுத்து மூலம் அறிவித்தல் வேண்டும்.

#### அட்டவணை

குருநாகல் நிருவாக மாவட்டத்தில் கனேவத்த பிரதேச செயலாளர் பிரிவில் தித்தவெலிகன்தஹே பத்துவில்/கோரளையில் 444 ஆம் நெரியாவ கிராம அலுவலர் பிரிவில் நெரியாவ என்ற கிராமத்தில் அமைந்துள்ளதும் இலக்கம் இ. கி. வ. 2764 அளவில் 4 ஏக். 00 றூட் 02 பேர்ச் அளவுடையதும், கீழ்க் காணப்படுமாறு எல்லைகளையுடையதுமான அரச காணி: எஹெலகஹமுல யாய,

வடக்கு : வை. எம். பொடி. அப்புஹாமியின் காணி ;
கிழக்கு : தடபலகமுவ கிராம எல்லை ;
தெற்கு : டீ. எம். எமானிஸ் அப்புவின் காணி மற்றும் ஆர். ஏ. ரணதுங்க அவர்களின் காணி ;
மேற்கு : ஒதுக்கப்பட்ட காணி.

ஆர். என். என். எல். கருணாரத்ன,
பிரதேச செயலாளர்/பிரதிக்காணி ஆணையாளர்,
(மாகாணங்களுக்கிடையிலான)

பிரதேச செயலாளர் அலுவலகம்,
கங்க இஹல கோரளை.
2019, செத்தெம்பர் 16.

11-1158/2

### காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உபபிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்புப்பத்திரத்தை இரத்துச் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்

வடமேல் மாகாண சபையின், குருநாகல் மாவட்டத்தில் அமைந்துள்ள பண்டுவஸ்நுவர மேற்கு பிரதேசச் செயலாளர் பிரிவின், பிரதேச செயலாளர்/பிரதிக் காணி ஆணையாளர் (மாகாணங்களுக்கு இடைப்பட்ட) என். ஏ. ஏ. எஸ். பிரியங்கர ஆகிய நான், காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் 19(4) ஆம் உப பிரிவின் கீழ் அதி உத்தமராம் சனாதிபதி அவர்களினால் 1988.05.19 ஆந் திகதி வழங்கப்படுள்ள குரு/ப்ர 20190 ஆம் இலக்க அளிப்பு பத்திரத்தின் உரிமையாளராகிய பரம்பொல, ஹல்மில்லவெவ எனும் முகவரியில் வசிக்கும் கழுபிடி முனிகே சரநேலிஸ் என்பவருக்கு கையளிக்கப்பட்டு குளியாபிடிய மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் குளி H1/170 எனும் இலக்கத்தின் கீழ் 1988.10.25 ஆம் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணிக்கு பின்னுரிமையாளராவதற்குச் சட்ட ரீதியான உரிமையாளராக இருக்க விரும்பாத காரணத்தால் பின்னுரித்துக்கு ஒருவரும் நியமிக்கப்படவில்லை என அறிக்கையிடப்பட்டுள்ளது. ஆதலால், குறித்த அளிப்புப் பத்திரத்தை மேற்கூரிய சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் பதிவழித்து நீக்குதல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என இத்தால் அறியத்தருகின்றேன். இது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனைகள் இருந்தால் அவற்றை 2019.12.01 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும்.

#### அட்டவணை

குருநாகல் நிருவாக மாவட்டத்தில் பண்டுவஸ்நுவர மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் கடுகம்பல பற்றில் கரந்தாபத்து கோறளையிலுள்ள 1421 - பரம்பொல கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த பரம்பொல எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் குருநாகல் நில அளவையாளர் நாயகத்தின் பொறுப்பில் வைக்கப்பட்டுள்ளதும் நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்டு துண்டு பிரிக்கும் வரைபடத்தில் எப். வி. பி. 2074 ஆம் இரேகை வரைதலில் 140 ஆம் இலக்க காணித் துண்டெனக் காட்டப்பட்டதும் 0.376 ரூட் விஸ்தீரணமுள்ளதும் கீழே தரப்பட்டுள்ள எல்லைகளைக் கொண்டுள்ளதுமான அரச காணித்துண்டு: காணியின் பெயர் வதுரஸ்ஸஹேன,

வடக்கு : காணித்துண்டு இலக்கம் 74B ;
கிழக்கு : காணித்துண்டு இலக்கம் 141 ;
தெற்கு : காணித்துண்டு இலக்கம் 165 ;
மேற்கு : காணித்துண்டு இலக்கம் 139.

என். ஏ. ஏ. எஸ். பிரியங்கர,
பிரதேச செயலாளர்/பிரதிக் காணி ஆணையாளர்
(மாகாணங்களுக்கு இடைப்பட்ட)

பிரதேச செயலாளர்,
பண்டுவஸ்நுவர - மேற்கு,
ஹெட்டிபொல.
2019, யூன் 04.

11-1158/1

**காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 (4) இன் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்புப்பத்திரத்தை இரத்துச் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்**

அதி உத்தமராம் சனாதிபதி அவர்களினால், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19(4) ஆம் உபபிரிவின் கீழ் பது/பிர/46555 ஆம் இலக்கத்தைக் கொண்ட அளிப்பு பத்திரத்தின் உரிமையாளரான எடம்பிடிய, அம்பிடகொட எனும் முகவரியில் வசிக்கும் உடுகும்புரகே ஜோஜ் த சில்வா என்பவருக்கு 2000.03.10 ஆந் திகதி வழங்கப்பட்ட கீழே தரப்பட்டுள்ள அட்டணையில் விபரிக்கப்படுள்ள இந்த பற்று நிலம் பதுளை மாவட்டப் பதிவாளரின் அலுவலகத்தில் L.D.O. 2002 ஆம் இலக்கத்தின் கீழ் 2000.08.08 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ளது. இப் பற்று நிலத்திற்குச் சட்ட முறையிலான பின்னுரிமையாளர் இல்லை என்பதாலோ அல்லது பின்னுரிமையாளர் இருந்தும் அவர் சட்ட முறையிலான பின்னுரித்து உரிமைக்கு விருப்பம் இல்லாமல் இருப்பதாலோ பின்னுரிமையாளர் ஒருவரை நியமனம் செய்யவில்லை என அறிக்கையிடப்பட்டுள்ளது. ஆதலால் ஊவா மாகாண சபையின் ஹாலிஎல பிரதேச செயலகப் பிரிவின் பிரதேச செயலாளரான ஹேவா பத்தினிகே அசங்க கயான் அனுருத்த ஆகிய நான், மேலே சொல்லப்பட்ட அளிப்புப் பத்திரத்தைக் காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ், இரத்துச் செய்வதற்கு நடவடிக்கைகள் எடுத்து வருகிறேன் என்பதை இத்தால், அறியத்தருகின்றேன். இது தொடர்பாக எதிர்ப்புகள் இருப்பின் 2019.12.20 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் அறியத்தரல் வேண்டும்.

**அட்டவணை**

பதுளை நிருவாக மாவட்டத்தின் ஹாலிஎல பிரதேச செயலக பிரிவின் தெஹிவின்ன பற்றில்/கோறளையில் ஊவமஹவெல கிராம அலுவலர் பிரிவில் உள்ள மஹவெலகம கிராமத்தில் அமைந்துள்ளதும், (கொடம்பஹின்னேபதன என அழைக்கப்படுவதும்) நில அளவையாளர் நாயகம் அவர்களினால் தயாரிக்கப்பட்டு பதுளை மாவட்ட அளவையியல் அதிகாரியின் பொறுப்பில் வைக்கப்பட்டுள்ளதுமான அ. கா. சி. 108 ஆம் இலக்கக் களத்தாளில் 205 ஆம் இலக்கக் காணித்துண்டு எனக்குறிப்பிடப்படுவதும் 03 றூட் 36 பேர்ச் விஸ்தீரணமுள்ள பின்வரும் எல்லைகளைக் கொண்டதுமான அரச காணித்துண்டு,

வடக்கு : ஜே. எம். கங்ஙதி ராலலாவின் காணி ;
கிழக்கு : ரீ. எம். திசாஹாமியின் காணி ;
தெற்கு : சாலை இட ஒதுக்கீடு ;
மேற்கு : யூ. கே. பிரான்சிஸ் த சில்வாவின் காணி.

எச். பீ. ஏ. ஜீ. அனுருத்த,
பிரதேச செயலாளர்.

பிரதேச செயலாளர் அலுவலர்,
ஹாலிஎல.
2019, செத்தெம்பர் 27.

11-1223/1

**காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 (4) ஆம் பதிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்புப்பத்திரத்தை இரத்துச் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்**

அதி உத்தமராம் சனாதிபதி அவர்களினால், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19(4) ஆம் உபபிரிவுக்கேற்ப 1990 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 12 ஆந் திகதி கல்கந்த, தியதலாவை, இல் வசிக்கும் ராஜி சிவலிங்கம் என்பவருக்கு பது/பர்/12736 ஆம் இலக்க அளிப்பின் கீழ் பாரதீனம் செய்யப்பட்டு பதுளை மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் 1991.07.03 ஆந் திகதி L.D.O. 660 ஆம் பதிவேட்டின் பக்கத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள, கீழ்க்காணும் அட்டவணையில் முழுமையாக விபரிக்கப்பட்டுள்ள காணியை, சட்டரீதியான பின்னுரிமை வாரிசு இல்லை என அறிக்கை செய்யப்பட்டுள்ளதால்/இருக்கும் பின்னுரிமை வாரிசு உரிமை கோர விரும்பவில்லை என ஊவா மாகாணசபைக்குட்பட்ட ஹப்புத்தளை பிரதேச செயலாளர் பிரிவின், பிரதேச செயலாளர் பண்டார அபயகோன் முதியன்சேலாகே சுனில் அபயகோன் ஆகிய நான், இத்தால் அறியத்தருகிறேன். ஆதலால், கட்டளைச் சட்டத்தின், 104 ஆம் பிரிவின் கீழ், மேற்கூறிய அளிப்பை ரத்து செய்ய நடவடிக்கைகள் மேறகொள்ளப்படுகின்றன. இந்நடவடிக்கைக்கு ஏதேனும் ஆட்சேபனை இருந்தால் 2019.12.06 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்து மூலம் எனக்குத் தெரிவிக்க வேண்டும்.

**அட்டவணை**

நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட - ஆம் இலக்க வெளிக்களத்தாளின் பிரகாரம் - அவர்களினால் தயாரிக்கப்பட்ட - இலக்கத் துண்டுகள் வேறாக்கப்பட்ட வரைபடத்திலிருந்து நிர்மாணிக்கப்பட்ட F.V.P 115 ஆம் இலக்க பிரதிப்படத்தில் காணித்துண்டு இலக்கம் 24 எனக் காட்டப்பட்டுள்ளது. பதுளை நிருவாக மாவட்டத்திற்குட்பட்ட ஹப்புத்தளை பிரதேச செயலாளர் பிரிவைச் சேர்ந்த மஹாபலாத்த - பற்று/கோரளையிலுள்ள தியத்தலாவை கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த கஹகொல்ல எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் 0.050 ஹெக்டயர் விஸ்தீரணமுள்ளதுமான அரச காணி.

இதன் எல்லைகள் வருமாறு:-

வடக்கு : காணித்துண்டு இலக்கங்கள் 363 மற்றும் 362 ;
கிழக்கு : காணித்துண்டு இலக்கங்கள் 362 மற்றும் 374 ;
தெற்கு : காணித்துண்டு இலக்கம் 374 மற்றும் 368 ;
மேற்கு : காணித்துண்டு இலக்கம் 368, 364 மற்றும் 363.

கே. பி. ஏ. எம். எஸ். அபேகோன்,
பிரதேச செயலாளர்.

பிரதேச செயலாளர் அலுவலகம்,
ஹபுத்தளை.
2019, ஒகத்து 28.

11-1223/2

# நானாவித காணி அறிவித்தல்கள்

காணி ஆணையாளர் நாயகத்தின் இல.:- 4/10/57699
மாகாணக் காணி ஆணையாளரின்
இல. :- CPC/ LC/ LD/ 04/ 01/ 27/ 310.

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21(2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

மாத்தளை மாவட்டம், தம்புள்ள பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட தம்புள்ள நகரம் கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த கீன்மொரகொல எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் பிபி. மா 968 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டு இலக்கம் 31 எனக் காட்டப்பட்டுள்ளதுமான சுமார் 10.58 பேர்ச் விஸ்தீரணமுள்ளதுமான அரச காணியை வர்த்தக நோக்கத்திற்காகக் குத்தகைக்குத் தருமாறு கேட்டுத் நிமல் சந்திரசிறி அவர்கள் விண்ணப்பித்துள்ளார் என இத்தால் அறியத்தரப்படுகிறது.

02. விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின்வருமாறு :-

வடக்கு : ஏ. வீ. அதுல குமார மற்றும் எம். லீலாவதி அவர்களுடைய காணி ;
கிழக்கு : எம். லீலாவதி மற்றும் ஏ. வீ. அதுல குமார அவர்களுடைய காணி ;
தெற்கு : ஏ. வீ. அதுல குமார அவர்களுடைய காணி மற்றும் வீதிக்காக ஒதுக்கப்பட்ட பகுதி ;
மேற்கு : வீதிக்காக ஒதுக்கப்பட்ட பகுதி மற்றும் ஏ. வீ. அதுல குமார அவர்களுடைய காணி.

03. குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக் கூடியதாய் இருக்கின்றது. ஆகவே அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனை கட்கும் கீழ்க் காணப்படும் நிபந்தனைகட்கும் அமைவாக இக் காணியைக் குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்.**- முப்பது (30) வருடங்கள் (2019.10.02 தொடக்கம் முன்னோக்கி) ;

**வருடாந்தக் குத்தகை.**- குத்தகை செயற்படுத்தப்படுகின்ற வருடத்திற்கான காணியின் விலை மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதி ரூபா 5 மில்லியனுக்கு (ரூபா. 50,00,000.00) குறைவாக உள்ள சந்தர்ப்பத்தில், பிரதான விலை மதிப்பீட்டாளரினால் மதிப்பீட்டின் அடிப்படையில் குறித்த வருடத்திற்கான காணியின் சந்தைப் காணியின் பெறுமதியில் 2% குத்தகை செயற்படுத்தப்படுகின்ற 2018 ஆம் வருடத்திற்கான விலை மதிப்பீடு செய்யப்பட்ட காணியின் பெறுமதி ரூபா 5 மில்லியனுக்கு (ரூபா. 50,00,000.00) மேற்பட்டு இருக்கும் சந்தர்ப்பத்தில், பிரதான விலை மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் குறித்த வருடத்திற்கான சந்தைப் பெறுமதியில் 4% குத்தகையாகக் கொடுபடல் வேண்டும். இந்த வருடாந்த குத்தகை ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை திருத்தியமைக்கப்படும் என்பதுடன், திருத்தியமைக்கப்பட்ட வருடாந்த குத்தகைப் பணம், நேர்முன் கடந்த ஐந்து வருட காலப்பகுதியில் இறுதி வருடத்தில் அறவிடப்பட்ட குத்தகைப் பணத்தில் 20% கூட்டி வருடாந்தக் குத்தகையாக அறவிடப்படும்.

